அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2024

## பேச்சு 2015 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவரர்கள்.

## பிறருக்கு உதவுவோம்

**«அறம் செய விரும்பு»** என்றார் ஔவை.

உதவுதல் என்பது எம் அனைவரிடமும் அவசியம் இருக்க வேண்டிய ஒரு நற்பண்பு. உதவி செய்யும் மனப்பான்மை உயர்ந்தது. உதவி செய்யும் பண்பானது உறவுகளை வளர்க்கும்; அன்பை வளர்க்கும்; நட்பைப் பெருக்கும்; நல்ல குமுகாயத்தை உருவாக்கும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் யாராவது ஒருவரின் உதவி தேவைப்படுகிறது. பிறரைச் சார்ந்து வாழக்கூடிய நிலையிலேயே உயிர்கள் அனைத்தும் படைக்கப்பட்டுள்ளன. பிறரின் தேவைகளை அடைய நாம் உதவினால், நம் இலக்கை நாம் எளிதாக அடைந்துவிட முடியும்.

பிறருக்கு உதவி செய்யும் போது, பயனை எதிர்பார்க்காமல் நாம் உதவிசெய்ய வேண்டும். அவ்வாறு செய்கின்ற உதவிதான் உதவியாகக் கருதப்படும். உதவி செய்யும் போது அந்த உதவியை உயர்வு, தாழ்வு பார்க்காது செய்தல் வேண்டும்.

**«பாத்திரம் அறிந்து பிச்சை இடு»**

ஒருவருக்கு என்ன தேவையோ, அதை அறிந்தே உதவி செய்ய வேண்டும். தேவை உள்ளவனுக்கு உதவாமல், தேவை இல்லாதவனுக்கு உதவினால் அதனால், எந்தப் பயனும் ஏற்படாது.

ஆமாம்! ஒவ்வொரு நாளும் யாருக்காவது ஏதாவது உதவி செய்து பாருங்கள், நீங்கள் மிகவும் மகிழ்வோடும் அமைதியோடும் இருப்பீர்கள்.

நன்றி

வணக்கம்

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.

அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.

மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.